# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


"நன்மை செய்யுங்கள்; எதுவும் எதிர்பாராமல் கடன்கொடுங்கள்" லூக். 6: 36.

அன்பு எதனையும் பதிலுக்கு எதிர்பார்க்காது. நல்லது செய்வதற்குக் கூலிகேட்பது அறிவுடைமையுமன்று; அருளுடைமையுமன்று. இறைவனிடமிருந்து எதனையாவது எதிர்பார்த்துச் செயல்படுகிறவர்கள் யாரும் மனநிறைவு கொள்வதில்லை.


96-ம் புத். | 1971-ம் ஆண்டு மாசி மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 8-ம் இல.


# புதிய அரசியல் சாசனத்தில்

## குடும்ப உரிமைகளும் வேண்டும்

இலங்கைக் கத்தோலிக்க சங்கச் செயலாளர் திரு. பிலிப் மோத்தா அவர்கள் தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் உத்தேச அரசியல் சாசனப் பிரேரணைகளுள் குடும்ப உரிமைகள் சேர்க்கப்படாதிருப்பதன் தவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அத்துடன் கல்விக் கருமங்கள், பெற்றோரின் உரிமைகள், பள்ளிக்குப்போகும் மாணவ மாணவிகளின் கருமங்கள்பற்றி அப்பிரேரணைகளில் ஒரு குறிப்பும் இல்லாதிருப்பதும் வருந்தத்தக்கதென அவரைப் பேட்டிகண்ட "மெசெஞ்சர்" பத்திரிகை நிருபருக்கு எடுத்து விளக்கினர். கத்தோலிக்க சங்கம் அனுப்பியிருக்கும் மறு ஆலோசனைகளுடன் இப் பிழைகளை நிவிர்த்திசெய்யும்படியும் புதிய அரசியல திட்டத்துக்குப் பொறுப்பாளியாகிய மந்திரி திரு. கொல்வின் ஆர். டி. சில்வாவைக் கேட்டிருக்கிறது.

## நாற்பத்துமூன்றுவது கருதினல்

லத்தின் மொழியில் பாண்டித்தியம்பெற்று நான்கு பாப்புமாரின்கீழ் சுமார் 40 ஆண்டுகளாகத் திருச்சபையின் மிகமுக்கிய சாசனங்களின்சிறந்த லத்தீன்மொழி பெயர்ப்பாளருமான கருதினல் அன்ரோனியோ பக்கி ஆண்டகை தமது 85ஆம் வயதிலே காலஞ்சென்றுரெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

இவர் 1931ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டுவரை இளவரசர்களுக்குக் கடிதப் போக்குவரத்துகளைக் கவனிக்கும்வத்திக்கான் மந்திரி காரியாலயத்தின் தலைவராயிருந்து திருச்சபையின் முக்கியமான பிரகடனங்களையும், பாப்புமாரின் பொது நிருபங்களையும் லத்தினிலே மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கின்றூர். 11ஆம் பத்திநாதர், 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர் எனும் பாப்புமார்களின் முதற்தரமான லத்தின் மொழிபெயர்ப்பாளராய் இருந்து உடனுழைத்து அவர்களுடன் பணியாற்றி வந்தார்.

இளவரசர்களுக்குக் கடிதப்போக்குவரத்துகளைக் கவனிக்கும் காரியாலயம் என்பது, பாப்பரசரிடமிருந்து லத்தின் மொழியில் இடைக்கும் கடிதங்களை மொழிபெயர்த்து ஒழுங்குபடுத்துவதற்கென வத்திக்கான்மந்திரி காரியாலயத்தில் இருந்துவரும் குழுவின் நிலையமாகும். தமது நீடிய உத்தியோக பதவிகாலத்திலே இவர் அடொல்வ் ஹிற்லர், பெனிற்றோ முசோலினி, ஜப்பானிய சக்கரவர்த்தி, எத்தியோப்பிய சக்கரவர்த்தி, இந்திய பிரதமர் நேரு முதலாம் அரசாங்க தலைவர்களுக்கு அத்தகைய கடிதங்களை எழுதியிருக்கின்றூர்.

இத்தாலியிலே புளோறென்ஸ் நகரில் பிறந்தவரான கருதினல் பக்கி ஆண்டகை சின்னப்ப பாப்பரசரின் ஆட்சிகாலத்திலே காலஞ்சென்ற 43-வது கருதினலாவர். இவரின் மரணத்தாலே திருச்சபைக் கருதினல்மார் தொகை 125பேராகியிருக்கிறது. இவர்களில் இத்தாலியர் 37; ஏனைய ஐரோப்பியர் 41; லத்தின் அமெரிக்கர் 16; வட அமெரிக்கர் 13; ஆசியர் 9, ஆபிரிக்கர் 7; அவுஸ்திரேலியர் 1; நியூசிலாந்தர் 1.

## மரியாயின் சேனைக்கு

### 50 வருட வயது

அயர்லாந்து தேசத்தில் டப்ளின் நகரத்தில் மரியாயின்சேனை முதன் முதல் நிறுவப்பட்டு இவ்வருடம் 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இவ்வைபவத்தை சிறந்த முறையில் இலங்கையிற் கொண்டாட ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இவ்வருடம் சித்திரைமாதம் 23, 24, 25-ம் திகதிகளில் கொழும்பு சஞ்சுசையப்பர் கல்லூரியில் இக்கொண்டாட்டம் நடைபெறும். கூட்டங்கள், சொற்பொழிவுகள், கண்காட்சிகள், சினிமாப்படங்கள் முதலியனவற்றின் மூலமாக மரியாயின் சேனை உலகின் பலஇடங்களிலும் செய்து வரும் அரிய சாதனைகள் வெளிப்படுத்தப்படும்.

## அதிசய வேதபோதக நாடு

கிறீன்லாந்து என்பது உலகின் மிகப்பெரிய தீவாகும்; அது 8,40,000 சதுர மைல் விஸ்தீரணமுடையது. உலகின் வேதபோதகநாடுகளில் இதுவும் ஒன்று. ஆனால், இதிலுள்ள அதிசயம் யாதெனில், அதில் வாழும் 40,000 மக்களிலும் 583பேர் மட்டுமே கத்தோலிக்கர், அங்குள்ளது ஒரேயொரு கத்தோலிக்ககோவில் மட்டுமே. அங்குள்ள கத்தோலிக்க மிஷனரிமார் மூவர் மட்டுமே, இந்தக் கோவில் அங்கு கோட்தாப் எனுமிடத்திலே இருக்கின்றது. இதற்குச் சேர்ந்தவர் என் 25கத்தோலிக்கர்மட்டுமே, ஏனைய 558கத்தோலிக்கரும் அங்கிருந்து 400 மைல் தூரத்தில் சஞ்சரிக்கின்றனர்.

இது அதிகம் தூரத்தில் இருப்பதாலும், அங்கு செல்ல அதிகம் கஷ்டமான பிரயாணம் நடத்தவேண்டியிருப்பதாலும் குருமார் இவர்களை விசாரணைசெய்யுமாறு வருடத்தில் இருமுறைக்குமேல் செல்லமுடியாதிருக்கின்றனர். சென்ற வருடம் இந்தமிஷனரிமாரில் ஒருவர் புயற்காற்று, பனிப்படலம் ஆகியவற்றினூடாக 48நாள் வள்ளத்தில் பிரயாணஞ்செய்து அத்தீவின் தென்முனைப்பேராய்ச் சேர்ந்தார். இந்தக்கஷ்ட பிரயாணத்தை அவர் மேற்கொள்ள முக்கியகாரணம், கத்தோலிக்க குழந்தை ஒன்றுக்கு ஞானஸ்நானம் அருளுவதே.

# உலக கிறிஸ்தவ சபைகளின் பொது நிறுவனம் இனத்திமிரை எதிர்க்கின்றது

உலக கிறிஸ்தவ சபைகளின் பொது நிறுவனம் பல இடங்களிலும் தலைகாட்டும் நிறத் திமிரை வேருடன் களைந்துவிடக் கங்கணம் கட்டி நிற்கின்றது. சென்ற தைமாதம் 10-ம் திகதி தொடக்கமாக 21-ம்திகதி வரையும் நடந்த அவர்களது மத்திய செயற்குழுவின் கூட்டத்தில் இரண்டாவது வார வேலையில் மறு கருமங்கள் யாவும் ஒத்திவைத்து இனத்திமிரைக் களைந்தெறியும் முயற்சியில் தீவிரமாய் ஈடுபட்டனர். ஆலோசனைகளின் முடிவில் பல கருமங்கள் உடனே செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அவற்றுள் பிரதானமானது, ஆங்கிலநாட்டுப் பிரதமர் ஹீத் அவர்களுக்கு அவசர தந்தி அடித்து, தென் ஆபிரிக்காவுக்கு யுத்த தளபாடம் கொடுத்துதவும் திட்டம் உடனடியாகக் கைவிடப்படவேண்டுமென்பதே.

## இந்தொனீசிய கத்தோலிக்கருக்கு அத்தேச ஆயர்களின் அறிக்கை

இந்தொனீசிய பிரதேசத்திலுள்ள 33 மேற்றிராணிமார் அண்மையில் ஒன்றுகூடி வெளியிட்டிருக்கும் அறிக்கை அத்தேச கத்தோலிக்கரது வாழ்க்கை வழிகாட்டியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. அந்த அறிக்கை கத்தோலிக்க விசுவாச கருமங்களுடன் அவர்களது சமூகவாழ்வுக்குரிய கருமங்களிலும் வழிகாட்டுகின்றது. தேவனின் அமைப்புக்கு உட்படத்தக்கதாக குடும்பத் தொகையைக் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு மக்களுக்குப் புத்தி புகட்டுகின்றது. மேலும் கல்வி, அரசியல், பொருளாதார துறையில் ஏனைய பிரஜைகளைப்போல் ஊக்கத்துடன் உழைத்து நாட்டின் செல்வத்தை அதிகரிப்பிக்க ஊக்கம் அளிக்கின்றது. மறு கிறிஸ்தவ சபையினருடன் ஒன்றுசேர்ந்து தேவனின் நற்செய்தியை கிறீஸ்தவர்களல்லாதவர்கள் மத்தியில் செயலளவில் காட்டுமாறு கேட்டுக்கொள்கின்றது.

● இந்தியாவின் வடபகுதியிலுள்ள உலகின் மகாஉயரமான இமயமலையின் உச்சியிலுள்ள எவெறெஸ்ற் சிகரத்தில் மற்றொருமுறை ஏறுவதிலே பலநாடுகளைச்சேர்ந்த 30 பேரைக்கொண்ட கோஷ்டி ஒன்று ஈடுபட்டிருக்கிறது. 1963ஆம் ஆண்டு இச்சிகரத்தில் ஏறுவதிலே வெற்றிகண்ட கோஷ்டிக்குத் தலைமைவகித்த நோர்மன் டைறன் பூ ஃபெண்பவரே இக்கோஷ்டிக்கும் தலைமை வகிக்கின்றார்.

## தேவதூஷணம் பின்லாந்தில் சட்டத்துக்கு எதிரான குற்றம்

பின்லாந்து தேசத்தில் தேவதூஷணம் சொல்பவர்களுக்கு இனிவரும் காலங்களில் சட்டப்படி மறியல் தண்டனை கொடுக்க அத்தேச ஆட்சிமன்றம் முடிவுசெய்திருக்கின்றது. பிரேரணையை எதிர்த்தவர்கள் ஆன்மகருமங்களில் தண்டனை கொடுப்பது முறையல்ல என்று வாதாடியபோதும் ஆளும்கட்சி, பின்லாந்து தேச கலாச்சாரத்தில் கிறிஸ்தவ விசுவாசம் தோய்ந்திருப்பதால் தேவதூஷணத்துக்கு அந்தேசத்தில் இடம் கைக்கப்படாதென வற்புறுத்தினர்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

எனது பார்வையில் :

# சிலுவையின்வழி சீவியம்

*[ஜயா ஜோசவ்]*

வாழக்காட்டி வாழ்வழித்த வள்ளல, இன்று செய்தார்க்கும் இனியன விளம்பவைத்த ஏந்தல், இடர் வரினும் அருள் சுரந்து அரவணைத்து ஆதரிக்கும் அமலன, எமது உயிரில, உணர்வில், மூச்சில யாவுமாய் நின்றிலங்கும் சிலுவை அண்ணல், வாழ்வளிக்கும் வள்ளல யேசுநாதர் சுவாமிகளின்— அவர் மானிட ஈடேற்றத்தினை நலன்காண விழைந்து, அதனால் ஏற்பட்ட துயர வேதனைகளின் சொல்லொணுப் பாடுகளை, நல்ல தமிழில், புதிய முறையில், குறுகநின்று விளக்கவைக்கும் சிந்தனையில், மணிமணியான வார்த்தைகளில் தனைகததே கொண்டு நிறைந்திருக்கும் ஒரு புதுமலர். அது—"சிலுவையின் வழி சீவியம்."

யாழ். அனை ஆயர் வீ. இ. அன்ரனி அவர்களது ஆசியுரையுடன் சிந்தனைக்குச் சிந்தனை கருத்துக் கூவலமாக பாவம் போக்கி பாகதி அளிக்கவந்து இடருற்ற தெய்வமகன் யேசுவின துயர அவலங்களைச் சிறிய காட்சிப்படலங்களாகக் கொண்டு விளங்குகின்றது. படங்கள் சிந்தனைக்கு மேலும் எழிலூட்டி நிற்கின்றன. பதினறு பக்கங்களில் பவ்வியமாக அமைந்திருக்கும் 'சிலுவையின் வழி சீவியம்' நல்ல ஒரு துணிவான முயற்சி.

காலத்தின் தேவையை அறிந்தோ அன்றி சிறிய சிந்தனைமூலம் மன நிறைவாக அடியார்கள் பரமன் யேசுவை நினைந்து உள்ளம் உருக வேண்டும் என்ற கருத்தினுல் தானே என்னவோ கையடக்கமான சிறிய அளவில் சிறப்பாக அமைந்துள்ளது இந்தச் 'சிலுவையின் வழி சீவியம்'.

பதினைந்து சிந்தனைகள் ஒவ்வொன்றும் பக்திப் பரவசத்தை அளித்து நிற்கின்றன. பாவிகள் நெஞ்சத்து இருளகற்றி வெளிச்சம் கொடுத்து இட்டுச் செல்லும் 'ஒளிவிளக்காக' சிந்தனைகள் மிளிர்வது, இதனை எழுதிய ஆசிரியரின் உள்ளத்து உணர்வுகளில் தேங்கி நிறைந்திருக்கும் தெய்வ வழிபாட்டின் உரமான உறுதி என்று கருதினுல் அது புகழ்ச்சியாகாது. ஒவ்வொரு சிந்தனையிலும் இந்த 'உறுதி' விரவிக்கிடப்பதை அவதானிக்க முடிகிறது.

'கடுகு சிறிதென்றாலும் காரம் குறைவில்லை.' பாராட்டக்கூடிய ஒரு முயற்சி.

> "மன்னிப்பு, மன்னிப்பு.
> மன்னிப்புத் தேவா!
> மன்னிப்பு, மன்னிப்பு
> தாருமே இறைவா"

என்றவாறு உள்ளம் கிறங்க வைக்கும் பாடலுடன் தொடங்கி;

> "ஏன் இந்தப் பாரம்,
> ஏன் இந்த நேசம்
> ஏசு உமக்கேன் மேல்
> ஏன் இந்தப் பாரம்"

என்றவாறு சிந்தனைகளின் முடிவு அமைந்திருப்பது மனதிற்கு ஆறுதலோடு அடியார் நிறைந்த மகிழ்ச்சியையும் பு[illegible]

# சிலுவையின் வழி சீவியம்

## தவக் காலத்துக்குரிய புதிய சிந்தனைகள்

— எஸ். எம். ஜே. —

### சிந்தனை 1

**யேசுவுக்கு மரணத்தீர்ப்பு**

மமதை பிடித்த மதத் தலைவர்கள்: அன்னுஸ், கைப்பாஸ்.

ஆட்சிப்பீடத்தின் அதிகாரிகள் : ஏரோது, பிலாத்து.

இவர்கள்முன் குற்றவாளி: இறைமகன் கிறிஸ்து....

அநீத குற்றச்சாட்டு; அநாசார நிந்தனை;

அநியாயத் தீர்ப்பு; சிலுவை மரணம்.

இவைகள், நன்மையே செய்தவருக்கு நயவஞ்சகர் அளித்த பரிசு.

நிந்தனையில் சூழ்நிலையில்......
நான் விரும்பா வழிகளில்...,
அபிப்பிராய பேதங்களில்
விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையில் ....

எதில் நான் கிறிஸ்துவைப் போலிருக்கிறேன்?

கிறிஸ்துவின் பொறுமையை எனக்கருள்வாய், இறைவா!

### சிந்தனை 2

**தன் சிலுவையை யேசு சுமக்கிறார்**

சிறையில் கிறிஸ்து......

அயோக்கியர், அரக்கர் நடுவில் இரவைக் கழிக்கின்றார்.

கற்றூணில் கட்டுண்டு கசையடி; அங்கமெல்லாம் ஆறுப் புண்கள்;

கண்களை மறைக்கக் கந்தல் துணி; கையில் மூங்கில்தடி;

தலையில் முள்முடி; முகத்தில் உமிழ்நீர்;

அவமான அரசனென அவசங்கை;

இப்போது—சுமந்துசெல்ல ஒரு சிலுவை.

கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறது செம்மறி.

அதன் வாயிலிருந்து வார்த்தை யொன்றும் வெளிவரவில்லை.

இத்தனை அவமான துன்பங்களையும் சகிக்க வேண்டிய மனேதிடன் தான் என்னே!

நான் துன்பத்தைக் கண்டு முறுமுறுக்கவில்லையா, முறைப்படவில்லையா? அற்ப காரியத்துக்கும் அமைதியிழக்கவில்லையா? முறுமுறுக்கும், முறைப்படும் ஒவ்வொரு முறையும் படிப்படியாக மனேபலத்தை இழந்து விடுகிறேன் அல்லவா?

**இறைவா! மனேபலத்தை எனக்கருள்வாய்**

### சிந்தனை 3

**யேசு பாரச் சிலுவையின் கீழ் விழுகிறார்**

பாரச் சிலுவையின் பளு;

உடல் வருத்தம்; மனே வேதனை

யேசுவும் மனிதனல்லவா.....? தன் பலவீனத்தால் விழுகிறார்.

ஆறுதல் கூற ஒருவன் இல்லை, அப் பெரிய கூட்டத்தில்.

ஆறுதல் அற்றோர்க்கு ஆறுதலும்,
அண்டினேர்க்கு அரவணைப்பும்,
அன்போடீந்த ஆண்டவனுக்கு,
இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலல்லவா இருந்திருக்கும்?
என் வாழ்வில் குறுக்கிடுவார் பலர்;

வெளிப் பார்வைக்கு முக மலர்ச்சியுடன் தோன்றுவார் சிலர்;

அவர்கள் உள்ளக் கவலைகளை, மனே வேதனைகளை யார் அறிவார்?

எனக்கு விருப்பமில்லாதவர்களின் துன்ப துயரங்களை ஊகித்து உணர்பவன் யார்?

இத்தகையோர்க்கு என் இதமான செயல்களால் ஆறுதலும் தேறுதலுமாக இருக்கிறேனு?

இன் சொல்லும், அன்புச் செயலும், இரக்க சிந்தையும் என் வாழ்வினில் விளங்க அருள் புரிவாய் இறைவா!

### சிந்தனை 4

**தன் அன்னையை யேசு சந்திக்கிறார்**

அன்று மரியன்னை தன் மகவைக் கண்டபோது அவர் முகத்தில் அழகு சிந்தியது

இன்று, அம்முகம் அழகிழந்து, உருவிழந்திருப்பதைக் காண்கிறாள்.

அன்று, கருணை கனிந்து, பாவியர்க்கு சாந்தியளித்த கண்கள்,

இன்று இரத்தக்கறை படிந்து, இருள் மண்டிக் கிடக்கின்றன.

அன்று, அன்பும் ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டிய உதடுகள்,

இன்று காய்ந்து கறை படிந்து வரண்டு கிடக்கின்றன. தாயின் சோகம் தனையனின் இதயத்தைத் தளரச் செய்கின்றது.

மரியன்னைபோ, இந்நேரத்தில் தன் மகவுக்குக் கை கொடுத்து உதவ முடியவில்லையேயென்று பதறுகிறாள்.

சந்தர்ப்பம் சூழ்நிலையிருக்கும்போதெல்லாம் என் அயலவருக்கு உதவுகிறேனு!

நற்காரியங்களுக்கு நான் ஓர் பக்கபலமாக தூண்டுகோலாக விளங்குகிறேனு!

எனது உதவி எத்தனைபேருக்கு வேண்டுமென்று இறைவன் விரும்புகின்றார்.

ஆனல் கிறிஸ்துவாக விளங்கவேண்டிய நான், இக்கருமங்களில் என்ன செய்கின்றேன்?

இறைவா! உன் சேவையின் கருவியாக என்னை ஆக்கியருள்.

— வளரும்

தகைதிறகு ஓர் அறுவையும் தந்து நிற்கிறது.

கிடைக்கு பீடம்:—
கட்டனேக்குரவர்,
தேவமாதா கோவில்,
ஊர்காவற்றுறை.

பாலைதீவுப் படகுவிபத்தில் அமரத்துவமடைந்த
ஆசிரியர் பிலிப்பு அந்தோனிப்பிள்ளை அவர்களின்

## முதலாம் வருட நிறைவு—27-2-70

மின்னுமல் முழங்காமல் இடிஇடித்தவாறுய்ப்
பிரியாது பிரிந்துசென்ற சொல்லரிய செல்வா!
புத்திசாலியென்று புகழ்பூண்ட உத்தமரே! நற்றவனே
அந்தோனிப்பிள்ளை என்ற அருந்தவா! ஆசிரியா!

அந்தோனியார்மீது அணைகடந்த அன்புகொண்டு
செவ்வாய்க் கிழமைகளில் பக்தி அனுட்டித்து
பக்தரிடம் போகவென்று பயணம் புறப்பட்டு
பரமனடி சேர்ந்தீரோ பதைபதைக்க விட்டுவிட்டு.

ஆசிரிய உலகினிற்கோர் அருஞ்சுடராய் அமர்ந்து
ஆங்கிலமொடு தமிழும் அயராது கற்றுயர்ந்து
முன்னேற்ற முறவாழ உலகும் பகைத்ததோ
முழுவல்லோனே! நல்லோனே! யாருமை மறந்திடுவார்.

கற்ற கலைகளெங்கே — உற்ற வீரமெங்கே!
பயில்வான் என்றேநீர் பலவித வித்தைகளும்
பயின்றிட்ட கலைகளெல்லாம் பாரிலுள்ளோர் பயிலத்
தயக்கமின்றி ஊட்டிடும் தாராள நெஞ்சமெங்கே?

ஆழ்துயரில் ஆழ்த்திவிட்ட அன்பரே உன்
ஆவி மனையாள் அன்னமும் அன்புசெறி சேயர்களாம்
அன்ரனிஷா, அன்ரனிற்று, அமிர்தராஜாவும்
ஆற்றெணுத் துயர்கொண்டு துடிக்கின்றார் அனையாரோ?

உற்றார் உறவினரும் ஆசிரியர் மாணவரும்
தாங்கமுடியாமல் தவிக்கின்றார் உம்பிரிவால்
எக்காலும் சாந்தியுடன் நிமலனடி நீர்வாழ
வேண்டுமென வேண்டுகிறோம் திருவருள் பெறுவாயே.

### நன்மாண அறிக்கை

"இம்மையில் அன்புபூண்டோம்
மறுமையிலும்
தொடர்ந்து கொள்வோம்."

எங்கள் அருமைக் கணவரும், தந்தையும், மாமனும், பாட்டனுமாகிய திரு. தொம்மைப்பிள்ளை இராயப்பு தம்பிராசா அவர்கள் சென்ற 8-2-71இல் தமது 80-ம் பராயத்தில் இறைவனடி சேர்ந்தார். இதைக் கண்ணுறும் வண. குருமார், கன்னியர், சகோதரர், மற்றும் உற்றார், உறவினர், அன்பர் யாவரும் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்கின்றோம். இவரின் பிரிவால் துயருறும்:

மனைவி:
ரேஸ் மரியஇரத்தினம்.

மக்கள் : திரு. அன்ரன் தம்பிராசா, திருமதி ரேஸ் அருளானந்தம், திரு. செபஸ்ரியன் தம்பிராசா.

மருமக்கள் : திரு. எஸ். ஏ. அருளானந்தம், திருமதி புஷ்பராணி தம்பிராசா.

பேரப்பிள்ளைகள் : மேரியன யசிந்தா, ஏன்சலின் நிர்மலா, யோசவின் பேர்ணடா, சாந்தி, ஜெந்தியா, மைக்கேல் அருட்குமார், யோசவ் டமியன்.

வல்வெட்டித்துறை.

அகஸ்ரீன் கிறிஸ்ரோப்பர்
அமரத்துவமடைந்த

### 4-ம் வருட ஞாபகம்

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 17-4-1903 | 28-2-1967 |

இவ்வாண்டாவின் இளைப்பாற்றிக்காக 1-3-71 காலை பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் 6-15 மணிக்கு ஒரு துக்கப் பாடற் பூசை நடைபெறும். இதைக் கண்ணுறுவோர் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவுடன் கேட்டுகிற்கிறோம்.

மனைவி :
எலிசபேத் கிறிஸ்ரோப்பர் (பூரணம்)

### நன்றித் துதிகள்

புனித யூதாததேயுவிடம் கேட்ட காரியம் கிடைக்கப்பெற்றேன். அவருடைய நாமம் எங்கும் புகழப்படுவதாக.

அடியாள்.
ஊர்காவற்றுறை

* * *

காணமற்போன பொருளையும், அதை எடுத்தவரையும் காட்டித் தரும்படி அர்ச். அந்தோனியார் மூலம் யேசுவிடமும், தேவதாயாரிடமும் வேண்டுதல் செய்தேன். அவ்வேண்டுதல் விரைவில் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்

* * *

என் இனத்தவளுக்கு ஏற்பட்ட மூளைக்கோளாறினுல் என்மகனுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் ஏற்பட்ட வீண் அவப்பேர் நீங்கவேண்டுமென்று பரி. காணிக்கைமாதாவிடம் கேட்டுக்கொண்டபடி கோயாளி பூரண சுகம் கிடைக்கப்பெற்ளு. தேவதாயின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்கு மன்னிப்புக் கோரிநிற்கிறேன்

ஓர் அடியாள்.

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், புனிதர்களான சதாசகாயமாதா, சூசையப்பர், யாகப்பர், யூதாததேயு, அந்தோனியார், அன்னம்மாள், திரேசம்மாள் என்போரின் வேண்டுதல்களினுலும் எனது நேர்த்தி பூர்த்தியானதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஓர் அடியாள்
குருநகர்

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், பரி. புதுமைமாதா, பரி. சதாசகாயமாதா, புனித யூதாததேயு இவர்களின் மன்றாட்டாலும் நான் கேட்டுக்கொண்ட மூன்று சகாயங்களும் அற்புதமாய்க் கிடைக்கப்பெற்றேன்.

நன்றி. ஓர் அடியாள்.
யாழ்ப்பாணம்

கடவுள் மனிதனுக்கு முதுகில் கண்ணை வைக்காவிட்டாலும், தன் முதுகைத்தானே தட்டிக் கொள்ளத் தக்க அளவுக்கு நீண்ட கரங்களை அளித்திருக்கிறான்.
**காண்டேகர்**

# கடவுளில் களிகூருவோம்

### மரியாளின் அழைத்தலால்

கடவுளால் படைக்கப்பட்ட சகல மனிதரும் கடவுளின் பரமானந்தத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். அன்றும் இன்றும் என்றும் அவரே அழைக்கின்றார். ஆதியும் அந்தமுமான தேவன் நித்திய வாழ்வானவர். தன்னில் நித்தியசீவியம் எல்லோருமடைய அவரே மாமிசமாகித் தனது தனிப்பெரும் வழியை இவ்வுலகில் அமைத்தார். மரியாளின் உதரத்தில் அவர் மாமிசமானார். மரியாளின் ஒத்துழைப்பு அவருடன் பூரணமாய் இருந்தது. தேவனின் சித்தத்திலும் மரியாளின் ஒத்துழைப்பிலும் அரசகுருத்துவ திருக்கூட்டம் முழுவதும் அடங்கியது. மரியாளின் அழைத்தல் இறை மக்களுக்குத் தேவன் விரும்பிய அழைத்தலாம். மரியாளில் கிறிஸ்து உருவானார். அத்துடன் கிறிஸ்துவின் மறை உடலும் உருவாக்கப்பட்டது. என்ன ஆனந்தம்! நித்திய தெய்வீக விருந்தாகிய அவரது பரமானந்த நிலைமைக்கு சகல மனிதரும் படைக்கப்பட்டனர். அழைக்கப்பட்டனர். என்ன பாக்கியம்! ஓசான்னா! வாழ்வளிக்கும் வள்ளலுக்கு ஓசான்னா! உன்னதத்தில் சருவேசுரனுக்கு மகிமையும் பூவுலகில் நல்மனதுள்ளோருக்கு அமைதியும் உண்டாகுக. இதுவே கபிரியேல் தேவதூதனின் மங்கள வார்த்தையின் அர்த்தம். மரியாளின் அழைத்தலில் என்றும் களிகூருவோம்.

### முன்னோடியைச் சந்தித்தலால்

மரியாள் மனுக்குலத்தின் உன்னத தெய்வீக பாத்திரமானாள்! மரியாள் எல்லோரையும் சந்திப்பாள். எல்லோருக்கும் நித்திய சீவியமாகிய கிறிஸ்துவை அளிப்பாள். தவம் நிறைந்த மனப்பான்மையையே அவள் எதிர்பார்க்கின்றாள். தேவ பாத்திரமான மரியாள் எலிசபேத் அம்மாளைத் தரிசிக்கிறாள். அவளின் உதரத்தில் தவத்தின் கனி நிறைந்திருந்தது. அதுவே புனித ஸ்நாபக அருளப்பர். இவரே யேசுவுக்கு வழியைச் செம்மையாக்குபவர். இவரே அவர் தெரிந்தெடுத்த முன்னோடி. நித்திய சீவியமான தேவனுக்கு உவந்த உயிருள்ள அன்பின் வாகனமே மரியாள். வாகனமும் தெய்வீக பாகனும் வெற்றிகரமாய்ச் செல்ல வழி கோலுபவரே புனித அருளப்பர். என்ன அழகான பவனி! ஆனால் சீவியம் அளிக்கச் செல்பவரில் சீவியம் பரிமாறும் மனப்பான்மை நிறைந்து இருக்கவேண்டும். அளிக்கிறவர் அழிய வேண்டும். விதை விழுந்து அழிந்தாலொழியப் பலன்தரமாட்டாது என்றார் தேவன். தேவனும் தேவதாயும் முன்னோடியும் ஒரே மனப்பான்மையுடையவர்கள். என்ன அழகு! மெய்யாகவே மனுக்குலத்தை முழுவதும் தேவன் மரியாளில் சந்தித்தார். இதுவே கல்வாரி. இக் காட்சியை யார்தான் மறக்கக்கூடும்? மரியாளின் சந்திப்பில் என்றும் களிகூருவோம்.

### மரியாள் யேசுவின் தாயானதால்

மெய்! தேவதாயார் தேவனைப் பெற்றெடுத்தார். இதற்கு அவரே சாட்சி. அவர் அவவுக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். அதேநேரம் இருவரும் இறைமக்களையும் பெற்றெடுத்தனர். இதற்குக் கல்வாரியே சாட்சி. மனுக்குலத்தை அவர் என்றும் தனது தூய ஆவியால் சீவிக்கச்செய்கிறார். அன்பு அவதாரமானது; அதனின் அரசும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உடையது. அதுவும் நம்முடையது. அவரில் விசுவாசம் கொண்டோருக்கு என்றும் பூரண நம்பிக்கையிருக்கிறது. தேவனை என்றும் எங்கள் உள்ளங்களில் ஏற்றிவைப்போம். அவருக்கு எங்கள் அன்பின் ஆராதனையும் நன்றியும் உரித்தாகுக. அவருக்கு உவந்த சிம்மாசனமாகவும் சீவிப்போம். அவருடைய தனிப்பெரும் சிறப்பை எடுத்துக் காட்டி அவரை ஆராதிக்க வந்த மூவிராசாக்கள்போல் ஞானப் பொன் மலர்களை அவர் பாதத்தில் சொரிவோம். அவரே எங்களின் இரட்சணியத்திற்கு உவந்த காணிக்கை யென்பதை அறிக்கையிட எங்கள் இருதயங்களை அவருக்கு என்றும் நறுமணமளிக்கும் தூபமாக்குவோம். அவரின் உத்தானத்தால் நாம் நித்திய சீவியத்தை எதிர்பார்க்கிறோம் என்பதைத் தெரிவிக்க கிறிஸ்துவோடு நாமும் பலியாகும் பரிமள தயிலத்தை அவருக்குக் காணிக்கை செய்வோம். எங்கள் இருதயங்களே அவருக்கு உவந்த பொன்னும் தூபமும் பரிமளமுமாம். மரியாள் தேவனின் தாயானதால் என்றும் களிகூருவோம்!

### மரியாளிடம் தேவனுக்கு மிகவும் பிரிய காணிக்கை இருந்ததால்

ஆபிரகாம் பலிக்கு ஆயத்தப்படுத்திவிட்டார். ஆனால் அது ஈசாக்குக்குத் தெரியாது. பலிப்பொருள் எங்கே யென்று பிதாவை வினவினான் குழந்தையாகிய ஈசாக். இப்படித்தான் மனிதரின் தொடர்பு. கட்டளை கொடுப்பவரைக் கட்டளை செய்பவர் பூரணமாய் விளங்குவதில்லை. ஆனால் யேசு பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டார். அதை நிறைவேற்றுவதே அவரின் உன்னத ஆனந்தம். எப்படி பிதாவின் சித்தத்தை சுதன் ஏற்றுக்கொண்டாரோ தேவதாயும் சுதனின் சித்

(மறுபக்கம் பார்க்க)

# குருமாரின் புகழ்பெற்ற தாய்மார்

இன்று கம்யூனிஸ்த நாடுகளில் ஒன்றாய் இருந்துவருவதும், என்றாலும் வத்திக்கானுடன் பூரண இராசியஉறவு பூண்டு, அதனிடமாகத் தனது ஸ்தானிகரைக் கொண்டிருப்பதுமான யூகோசிலேவிய நாட்டின் பிரபல கருதினலாக விளங்கியிருந்து அமரத்துவமெய்திய ஸ்ரீபினக் ஆண்டகையின் குருத்துவ அழைத்தல்பற்றிய ஆச்சரிய சம்பவமானது, கத்தோலிக்க பெற்றோருக்கெல்லாம் ஒரு தூண்டுகோலும், அருட்சி உண்டுபண்ணுவதுமாகும். அலோய்சியஸ் ஸ்ரீபினக் பதினொரு பிள்ளைகளைக்கொண்ட ஒரு பாரிய குடும்பத்தில் உதித்த ஏழாவது பிள்ளையாவர்.

கத்தோலிக்க பெற்றோர் எவரும் பின்பற்றத்தகுந்த— அதிகம் சிறந்த பக்திவைராக்கியமுள்ள கத்தோலிக்க மாதுவாகிய அவருடைய தாய் தனது அருமைமகன் அலோய்சியஸ் ஒரு குருவாகவரக் காணவேண்டுமென்று வெகுவாக ஆசித்தாள். இந்த அருள் தனக்குக் கிடைக்கும்படியாய் நெடுந்தவம் கிடந்தாள். முப்பது ஆண்டுகளாக வாரந்தோறும் மூன்றுநாள் உபவாசமிருந்தாள். கடைசியாக இந்த அருள் இறைவனால் அவளுக்குக் கிடைத்தது. அவள் ஆசித்தது கைகூடியது.

1923ஆம் ஆண்டு திருமதி ஹவ்லிக் என்ற ஓர் அமெரிக்க மாது பாயும் படுக்கையுமாக மரணத்தருவாயில் இருந்தாள். அப்பொழுது அவள் தனது பதின்மூன்று பிள்ளைகளையும் தன்னுடைய படுக்கையருகே வரவழைத்தாள். அவள் இந்த உலகினைவிட்டுப் பிரிவதற்கு முன் தனது வாழ்நாள் முழுவதும் கண்டகனவை நனவாக்குவதற்கான ஒழுங்குகளைச் செய்துவைக்க ஆசித்தாள். பரிசுத்த குருத்துவத்திற்கு ஓர் இளைஞனை படிப்பிப்பதற்குப் போதியதாய் அவள் பலவருடங்களாகச் சதம்சதமாகப் பணம் சேமித்து வைத்திருந்தாள். அதே கருத்துக்காக இந்தப்பணம் பிரமாணிக்கமாகச் செலவிடப்படவேண்டுமென அப்பொழுது அவள் விரும்பினாள். அவளுடைய பிள்ளைகளும் அவ்வாறு செய்வதாக வாக்களித்தார்கள்.

இந்தப் பக்திவைராக்கியமுள்ள பெண்மணி மரணமடைந்தபின் இந்தப் பணத்தை றோமாபுரியிலுள்ள ஜேர்மனிய—ஹங்கேரிய ஸ்தாபனத்துக்கு அவளுடைய மகள் அனுப்பிவைத்தாள். அமெரிக்காவிலே கினெட் நகர் வாசியான இரத்தவீரத்துவ பெண்மணி ஆற்றிய தியாகங்களின் பலன் மற்றொரு வீரத்துவ பெண்மணியான திருமதி ஸ்ரீபினக்கின் நீண்டகால கனவை நனவாக்க வேண்டுமென்பது தேவசித்தமாயிற்று, அதாவது திருமதி ஹவ்லிக்கின் நன்கொடையைப்பெற அவளுடைய மகன் அலோயசியஸ் ஸ்ரீபினக் தெரிந்துகொள்ளப்பட்டார். இந்த வீரத்துவ பெண்மணிகள் இருவரினதும் செபங்களுக்கும், தியாகங்களுக்கும் பிரதிபலனாக ஒரு குருத்துவ அழைத்தல் இறைவனால் அருளப்படலாயிற்று. செபங்களும், பரித்தியாகங்களும் எந்த ஒரு அருளையும்—எல்லாத்துக்கும் மேலாக ஒரு குருத்துவ அழைத்தலுக்கான அருளையும் இறைவனிடமிருந்து ஈட்டிக்கொடுக்கின்றன.

இங்கிலாந்திலே புரொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்க மறையில் சேர்ந்து கொண்ட ஒரு தாய் தனது பிள்ளைகள் குருமாரும், கன்னியாஸ்திரிமாருமாக வரவேண்டுமென்று திவ்வியநற்கருணை முன்பாக நெடுநாள் செபஞ்செய்து வந்தாள். தினமும் சாயந்தரவேளை 5 மணி முதல் 6 மணிவரை நெடுமுழந்தாளிலிருந்து மன்றாடி வந்தாள். அவளுடைய பிள்ளைகள் அவள் செயலை இருபது ஆண்டுகளாய் அவதானித்து வந்தார்கள்.

அதன் விளைவு என்ன? அவளுடைய பதின்மூன்று பிள்ளைகளில் ஐந்து புதல்விகள் மடத்திற்சேர்ந்து கன்னியாஸ்திரிமார் ஆனார்கள். எட்டுப்புதல்வர்களில் ஆறுபேர் குருமாரானார்கள். இவர்களில் மூவர் மேற்றிராணிமாராயினர். மூவரிலும் இந்த ஒருவர் அங்கு சால்போட் மேற்றிராசனத்தின் துணைஆயராயும், மற்றொருவர் ஆஸ்திரேலியதேச சிட்னிநகர் அதிமேற்றிராணியாராயும், மூன்றாவதான தலைமகன் லண்டன்நகர் வெஸ்ற்மினிஸ்றரின் அதிமேற்றிராணியாராயும் கீர்த்திவாய்ந்த கருதினலாயும் விளங்கினர். வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலைக் கட்டியெழுப்பியவர் ஹேர்பேட்வோன் எனப் பெயரிய இந்தக் கருதினல் ஆண்டகையே. அதுதவிர மில்ஹில் குருமார் சபையையும், மில்ஹில் கன்னிகாசபையையும் அடியிட்டவரும் இவரே.

இந்தப் பதினொரு தேவ அழைத்தல்களையும் கண்டடைய அந்தப் பக்தியுள்ள தாய் சுமார் 7,500 மணித்தியாலங்களைத் திவ்வியநற்கருணை முன்பாகச் செபத்திலே செலவிட்டிருக்கின்றாள். பிரசித்திபெற்ற வோண் குடும்பத்தை வரலாற்றில் இடம்பெறச் செய்த இந்தப் புண்ணியவதியை அன்றும் இன்றும் போற்றாதாரில்லை.

# இரு கோடுகள்

(யோ. சைமன்—வவுனியா)

உடலெடுத்த மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் இன்பக் கடலில் நீந்தவே ஆசிக்கிறான். எதிர்வரும் துன்பங்கள் துயரங்கள் யாவையும் தவிர்த்துக்கொள்ளத் தன்னாலான முயற்சியெடுக்கிறான். ஆயினும் துன்பமும் துயரமும் பிறப்பு முதல் இறப்புவரை மனிதனைத் தொடர்ந்தே வருகின்றன. மனம் நிறைந்த மட்டும் பணம் தேடிக் குவித்தால் இன்பம் காண முடியுமென்று இரவும் பகலும் அயராது உழைக்கிறான். திரைகடல் ஓடியும் அலைகிறான். பசிப் பிணியால் வாடும் அயலானையும் எட்டிப் பார்க்க மனமில்லை. அல்லும் பகலும் அழைக்கிறதே ஆலய மணி, செவி மடுக்க நேரமில்லை. உழைப்பு உழைப்பு என்றே ஓடி அலைகிறான். பஞ்சமாபாதகங்களைத் தன்னும் செய்ய அஞ்சுவதில்லை. துன்பம் துயரம் நிறைந்த உலகில் அமைதி காண முடியாதா? மனச்சாந்தி கிடைக்காதா? தாங்கொணு வறுமை, தீராத நோய், பகைவர்களின் குரோதம், காத்திராப்பிரகாரம் ஏற்படும் விபத்து எல்லாம் மனிதனின் உள்ளத்தை வாட்டி வதைக்கின்றதே. இவையெல்லாம் தவிர்த்து வாழமுடியாதா? பாதை தவறி வழி நடப்பவன் படுகுழியில் விழுவதுபோல வாழ்க்கையின் இலட்சியத்தைக் கைவிட்டு இருதயம் ஆசிக்கும் இன்பமெல்லாம் அனுபவிக்க முயற்சித்தால் மேற் கூறிய துன்பங்கள் யாவும் கசந்தே தோன்றும்.

பரகதிக்கென்றே படைக்கப்பட்ட மனிதன் அதையே தன் வாழ்க்கையின் இலக்காக வைத்துக்கொள்ளல் வேண்டும். தெய்வ சாயலான மனிதனிடத்திலிருந்து அன்பு ஊற்றெடுத்துத் தெய்வத்தின் மட்டிலும் தன் உடன் பிறவிகளிடத்திலும் அன்பை அள்ளி அள்ளிச் சொரிவதே முறை, அன்பு செய்வதென்றால் துன்பந் தாங்க வேண்டுமே. அன்பும் துன்பமும் ஒன்றோடொன்று இணைந்த இரு கோடுகள். இவ் இரு கோடுகளிலும் கிறிஸ்துவின் தெய்வ ஒளி பிரகாசிக்கின்றது. கிறிஸ்துவின் தெய்வீகத்தில் பங்கு கொள்ளும் எமக்கு அவரின் பாடுகளிலும் பங்கெடுக்க வேண்டுமென்பதே தெய்வ சித்தம், எமக்கு நேரும் துன்பங்கள் யாவற்றையும் தெய்வீக அன்பின் நிமித்தம் சகித்துக்கொள்ளவே வேண்டும். சூரிய வெப்பம் சில பொருள்களை இழகச் செய்யும். சிலவற்றைக் கடினமாக்கிவிடும். அதுபோல் எமது துன்ப வேளையில் தெய்வீக அன்பும் சேர்ந்துவிடின் நமது இதயம் இழகித் தேவசாயலாக மாறிவிடும். இல்லையேல் கடினமாகிவிடும். கடவுளை விட்டுத் தூரத்தே போக நேரிடும். எல்லாம் அறிந்த கடவுள் மனிதனின் பலவீனம் எத்துணை என்பதை அறிந்துதான் ஏழு தேவதிரவிய அனுமானங்களை ஏற்படுத்தினர். அன்பும் துன்பமும் மனித வாழ்வில் நேர்வழி காட்டும் இரு கோடுகள்.

# இளைஞர் உலகு



**அன்புச் சோதரர்க்கு!**

எமது நெற்றியில் மந்திரிக்கப்பட்ட கரியைப் பூசி தபசுகாலத்தை ஆரம்பித்துவிட்டோம். தபம் என்றதும் நம்மில் பலருக்கு பெரியதொரு பாரச்சுமைபோல் இருக்கிறது. எமது அன்றாட கடமைகளைச் சரியாய்ச் செய்வதன்மூலம் பெரிய தபசைச் செய்து விடலாம். இதை நம்மில் பலரும் சிந்திப்பதில்லை. எனவே, இத் தபசு காலத்தில் எம்மையே ஒறுத்து வரவிருக்கும் ஈஸ்டர் இன்பத்தில் பங்குபெற முயற்சிப்போமாக.

கடந்தவார இளைஞர் உலகுபற்றி அதிகமானோர் பாராட்டுகள் தெரிவித்துள்ளனர். "விவாத மேடை" என்ற புதிய அம்சம்பற்றி அதிக கட்டுரைகள் எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் சில இவ்வார இளைஞர் உலகில் இடம்பெறுகின்றன. மேலும் புதிய பல அம்சங்களைச் சேர்க்கும்படி அதிகமானோர் கடிதம் எழுதியுள்ளனர். வலையன் மடத்தைச் சேர்ந்த யோ. செபமாலை என்பவர் கடந்தவார இளைஞர் உலகைப் பாராட்டி எழுதியுள்ளார். இளைஞர் உலகின் வளர்ச்சி உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. விடயங்களைத் தாளின் இருபக்கங்களிலும் எழுதவேண்டாமெனப் பல முறை கூறியும் சிலர் கவனிக்கவில்லை. அத்தகைய விடயங்கள் கவனிக்கப்பட மாட்டாதென்பதை இறுதியாக அறியத்தருகிறேன்.

—சோதரன்

## சினிமா இளைஞர் சமுதாயத்திற்குத் தீமை செய்கின்றதா?

(செல்வி மேரி ரோசலின் சூசைப்பிள்ளை)

இளைஞர்களின் வாழ்வைப் பொறுத்தமட்டில் "ஆம்!" என்றுதான் நாம் கூறமுடியும். "வாழ்வின் வசந்த காலம்" எனப்படும் வாலிபப் பராயத்தை "வாழ்வில் வழிக் கிவிழும் பருவம்" என்றும் சொல்லலாம். கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தோடு வளர்ந்துவரும் பிள்ளைகள் காமஉணர்வுகளுக்கு வசப்பட்டு ஒழுக்கம் என்னும் மன உறுதிநிலையில் நின்று ஆட்டம் போடத்தொடங்கும் பருவம் வாலிபப்பருவமே!

இந்தப்பருவத்தை எட்டிப் பிடிக்கத் தொடங்கும் இளைஞர்களுக்கு; இன்றைய சினிமா உலகு ஆர்வம் கொண்டு—அங்க அமைப்புகளை அணு அணுவாகக் காட்டும் ஆடை போகினிகளின் நாட்டியங்கள், அரைநிர்வாண ஆபாசக் காட்சிகள். "காதல் என்னும் போதையூட்டும் கனவுலக வாழ்வு." இவற்றை நன்வாக்கத் துணிந்து தம்வாழ்வில் இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர முயலும் இளைஞர்களும், யுவதிகளும் வாழ்வில் முன்னேற்றத்தையும், வெற்றியையும் காண்கிறார்களா? "பட்டினி கிடந்தாலும் பட்டுத் தரித்தால் போதும்" என்னும் மனப்பான்மையுடன் நாகரீக மோடிகளைப் பின்பற்றும் நாரிமணிகள் "ஆடைக்குறைப்பு அலங்காரங்களை"க் கண்டுபிடிக்கும் நிறுவனம் சினிமாக் கொட்டகைதானே!

ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்பதை இவர்கள் மறந்து, "ஏரோதியாளின் மறுஅவதாரங்களாக இவர்கள் வீதிவலம் வருவதைக்காணும் காளையருக்குக் காமவெறி ஏற்படாதா? எனவே சினிமாவில் கண்ட வாலிபர் கோஷ்டியை உலகில் உள்ள வாலிபர் கோஷ்டி பின்பற்ற முற்படுகின்றது. விளைவு? "உலகமே நாடகமேடையாக" மாறிவிடுகின்றது. பொறுப்புணர்ச்சி, தியாகம், நேர்மை, பிரமாணிக்கம், என்னும் நற்பண்புகள் நானிலத்தில் காற்புறமும் கிளைபரப்பவேண்டிய பருவத்தில்—சுயநலம் சூது, காமம், களவு, காடைத்தனம், என்னும் இழியபண்புகள் தலைவிரித்தாடுகின்றன. நாட்டின் முதுகெலும்பான இளைஞர் சமுதாயம் இவ்விதம் நஞ்சூட்டப்பட்டால் நாடு முன்னேற்றம் அடையுமா?

எங்கள் மறையுலகில் ஆன்ம வாழ்விற்குக் கண்ணடக்கம் கண்டிப்பாக வற்புறுத்தப்படுகின்றது. கண்களே எங்கள் ஆத்துமங்களின் யன்னல்களாகும். நல்லவையும், தீயனவும் ஆனகாட்சிகள் கண்களினூடாக மனதிற்பதிந்து எங்களை நன்மைக்கு அல்லது தீமைக்குச் சார்புள்ளவர்களாக மாற்றுகின்றன. இதன் நிமித்தமே "எங்கள் கண்களினூடாக ஒரு சம்மனசை அல்லது இருகொம்புகள் உள்ள ஒரு சாத்தானை எங்கள் ஆத்துமத்தில் குடியிருத்தலாம்" என்று புனித டோமினிக் சாவியோ சொல்லியிருக்கிறார். ஆகையால் இளைஞனே! யுவதியே! இன்றைய சினிமா உலகு உன் ஞான வாழ்விற்கு அதிக நன்மை செய்கின்றது என்று நீ துணிந்து சொல்லமுடியுமா?

கலைக்கூடங்களான சினிமாக் கொட்டகைகள் சன்மார்க்கத்தையும்; அறிவையும்; ஆக்கவேலைகளான தொழில் துறைகளையும் அபிவிருத்தி செய்யும் விளம்பர சாதனங்களின் இருப்பிடமாக விளங்குதல் வேண்டும். அப்படியன்றி:—

"சினிமா சிறுவருக்குச்சினிமா;
இளைஞருக்கு இழிவான
இன்பஞ் சுரக்கும் ஊற்று;
முதியவர்க்கு முதுமைக்
கேற்ற முற்றும் சுகமான
தொழில்"

என்பதாய் அமைந்திருக்கப் படாது.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. இலங்கையின் முதலாவது தபால் முத்திரை 1857-ம் ஆண்டு வெளிவந்தது.
2. திருக்குறளை லத்தின் மொழியில் மொழிபெயர்த்தவர் வீரமாமுனிவர்.
3. ரேடியோவைக் கண்டுபிடித்தவர் மார்க்கோனி.
4. தேனீக்கு இரண்டு வயிறுகள் உண்டு.
5. ஏலச்செடி நாற்பது ஆண்டுகளுக்குப் பலன்தரும்.
6. மாட்டின் குளம்பு, தோல்களைப் பக்குவமாய்க்காய்ச்சி வச்சிரம் என்னும் பசை செய்யப்படுகிறது.
7. நீதிபதி குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்கும்போது கறுப்புத் தொப்பி அணிவார்.
8. ஒலிம்பிக் விளையாட்டுக்களை ஆரம்பித்தவர் கிரேக்கர்.

## இசை இறையருளைப் பெறும் ஏணி

மனிதன் தன்னை மறந்து துய்க்கும் கலைகளில் இசையும் ஒன்றாகும். பண்டைக்கால முதல் தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் இசையும் பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றது. தொட்டில் முதல் தொண்டமான்வரை, ஏழை முதல் பணக்காரன்வரை, சிறுவர்முதல் முதியோர் வரை இசைகேட்டு மயங்காதவர் எவருமிலர். இதனாற்போலும் தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் இசை தனியிடத்தை வகிக்கின்றது. பிள்ளையைத் தாலாட்டவும், தண்ணீரைப் பயிருக்கு நீர்ப்பாய்ச்சவும் இசை உதவிபுரிகிறது. அது மட்டுமன்றி மங்கல அமங்கல விழாக்களிலும், ஆலயவழிபாட்டிலும் இசை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

புற்றிலிருந்து புறப்படும் நாகம் மகுடியின் இசைகேட்டு மயங்கும்; நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தக் கஷ்டமான வேலைசெய்யும் தொழிலாளி கூட இசைகேட்டுத் தன் களை தீர்ப்பான். பாற்சோறென்றாலும் உண்ணமாட்டேன் என்று அடம்பிடிக்கும் குழந்தை கூட இசைகேட்டு அவ்வின்பத்தினூடே பாற்சோற்றை உண்ணும். ஆயனின் வேய்ங்குழல்கேட்டு ஆநிரைகள் தாயைக்கண்ட சேய்போல் தாவி வருகின்றன. இவ்வாறு மனிதர்கள் மட்டுமன்றி மிருகங்கள், பறவைகள்கூட இசையில் தம்மை மறக்கின்றன. பல்வகைச் சமயங்களும் இசைக்கு முதலிடம் கொடுக்கின்றன. இசை பாடுவதனால் ஒருவனுடைய உள்ளம் தூய்மை அடைவதோடு அவனுடைய உறுப்புக்கள் வலிமையடைந்து அவனை ஆரோக்கியமுள்ளவனாக்குகின்றன.

இசை பாடுவதனாலேயே அழுக்காறு, பொய், களவு முதலிய தீயகுணங்கள் மறைந்து, இறையுணர்ச்சி யேற்பட வழிபிறக்கும். எனவே இசை இறையருளைப்பெற ஓர் ஏணியாக, இன்னற்கடலைக் கடக்க ஒரு தோணியாகத் திகழுகின்றது. எனவே, யாவரும் இசையைப் போற்றி வளர்க்க வேண்டும்.

இரா. செழியன்

## நம்புங்கள்

**அம்மாவுக்குத் தெரியுமா?**

குழந்தை அழுவதில் மொத்தம் இருபதுவகை இருக்கிறது. கோபம், பசி, நோய் இவ்வாறு இதில் இருபது வகை இருக்கிறது. எங்கள் அம்மாவுக்கு இது தெரியுமா?

**வோட்போட ஒத்திகை!**

சுவீடனில் உள்ள பள்ளிப் பிள்ளைகளுக்கு வோட்போட (வாக்குரிமை) பயிற்சியளிக்கிறார்கள். இதற்காகத் தேர்தல் நாளைப்போன்று ஒருநாளில் ஒத்திகை நடக்கிறது.

**எருமைப்பலி!**

ஊட்டிமலைப் பகுதியில் வாழும் தோடர்என்ற இன மக்கள் தம் உறவினரின் இறந்தநாளை எருமைகளைப் பலியிட்டுக் கொண்டாடுகின்றனர். இதற்காக எருமைகளை வளர்க்கும் பழக்கம் இவர்களிடம் குடிகொண்டுள்ளது.

**வெள்ளிக்கிழமை திருமணம்!**

காடர்கள் என்னும் பழங்குடிமக்கள் வெள்ளிக்கிழமைகளில்மட்டும்தான் திருமணம் செய்வர். ஏனைய நாட்களில் எக் காரணத்தைவிட்டும் திருமணம் செய்யமாட்டார்கள்.

**பிளட் பிரசர் இல்லை!**

சாம்பருஎன்ற பழங்குடி மக்கள் தமது உணவில் உப்பைச் சேர்ப்பதேயில்லை. இவர்கள் காடுகளில் வசிப்பவர்கள். இதுவரை உப்பைக்கண்டதேயில்லை. இதனால் இவர்களில் ஒருவருக்கேனும் பிளட் பிரஷர் (இரத்தக் கொதிப்பு) இல்லையாம்.

தயாரிப்பு — இ. பே.

## கடவுளில்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டாள். அதைச் செய்வதே அவளின் ஆனந்தம். யேசு முற்றுப்புள்ளி வைத்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார் கல்வாரியில். மரியாள் பிதாவின் சித்தத்தையும் சுதனின் சித்தத்தையும் நிறைவேற்றினாள் தேவாலயக் காணிக்கையில். மாமிசமான வார்த்தை தேவனின் வார்த்தை. மரியாள் தேவனையும் தேவ மக்களையும் தனது உன்னத சம்மதத்தால் ஐக்கியப்படுத்தினாள். மறை உடலாகிய இறை மக்களும் அதனின் நித்திய சிரசாகிய இறைவனும் மரியாளின் உதரத்தில் உருவானது. மரியாளின் சிறந்த காணிக்கையால் நாமெல்லோரும் யேசுவோடு கல்வாரியின் பலிப்பொருளும் குருவுமாய் மாறிவிட்டோம். எனவே புனித இராயப்பர், "நீங்களோ அரச குருத்துவ திருக்கூட்டம்" என நம்மை வாழ்த்திப் பாராட்டுகின்றார். மரியாளிடம் தேவனுக்கு மிகவும் பிரிய காணிக்கை இருந்ததால் களிகூருவோம்!

### மரியாள் யேசுவைக் கண்டடைந்ததால்

தாய்க்குத்தான் தான் பெற்ற பிள்ளையைத் தெரியும். யேசுவைக் காணிக்கையாக வைத்த மரியாள் நம்மெல்லோரையும் அவருடன் காணிக்கையாகத் தேவாலயத்தில் வைத்தாள். இறைவனையும் இறை மக்களையும் அவள் அறிவாள். யேசுவின் பெறுபேறுகளால் தேவன் இறைமக்கள் அனைவரையும் நித்தியத்திற்கு ஏற்றுக்கொண்டார். தேவாலயத்தில் தேவதாயும் யேசுவும் ஆரம்பித்ததைக் கல்வாரியில் யேசுவும் தேவதாயும் முற்றுவித்தனர். மரியாளின் சீவியத்தின் நாயகன் யேசுவே. அவரை அவள் இழந்தது போல் இருப்பினும் அவள் இழக்கவில்லை. அதேபோற்றான் கிறிஸ்துவின் மறை உடலாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அனைவரும் மரியாளின் ஒத்துழைப்பைப்போல் தங்கள் சீவியத்தில் கிறிஸ்துவின் மரணத்தை அறிக்கையிடவேண்டும். அப்போதுதான் அவரின் உத்தானத்தின் மகிமைக்கும் பாத்திரராவார்கள். அவர்கள் தங்கள் சீவியத்தின் நாயகனை நித்தியத்திற்கும் கண்டடைவார்கள். இதுவே யேசு நமக்கு அளிக்கும் பரம திரித்துவத்தின் சீவியம். இதுவே மரியாளின் அக்களிப்பின் காரணம். மரியாள் என்றும் அவரிலும் அவராலும் அவரோடும் சீவிக்கிறாள். மரியாள் தனது காணிக்கையாகிய திவ்விய பாலனைக் கண்டடைந்தால் நாம் மரியாளோடும் யேசுவில் களிகூருவோம்.

மேற்கூறிய அன்பின் நினைவுகளால் நிறையப்பெற்று எங்கள் தேவதாயாருக்குப் புகழ்மாலையைச் சூட்டுவோம்.

— பிறே. ஜெ. அமிர்தநாயகம்

# பாவிகள் மத்தியில் அன்பர்

(ஆசிரியர் ஜி. ஈ. மிராண்டா, வங்காலை)

[முன் தொடர்ச்சி]

கிறிஸ்துஏசுவின் போதனைகளின் மொத்தக்கருத்து தேவ அன்பும் சகோதர அன்புந்தான். இவை இரண்டும் பலிக்காமல் போனால் அவர் பிறப்பும், இறப்பும், எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வீணாகும். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்" என்றார் மேல்வீட்டில் மூன்றுதரம் சகோதர அன்பைப்பற்றிப் பேசிவிட்டார். அதுவே அவருடைய இருதயத்தை நிரப்பிக் கொண்டிருந்தது. "நான் இதுவரை உங்களுக்குப் போதித்ததும் திராட்சைச் செடிகொடிகளைப்பற்றிய போதனைகளும் நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கே. நான் மறைவேன் நீங்கள் இருப்பீர்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் மனுஷர் என்னை உங்களில் காண்பார்கள்" என்றார். அன்பாயிருக்கும்படி கட்டளையிட்டார். அன்பை சீடர்களுக்கு வாக்குப்பண்ணினார். அவர்கள் அன்பர்களாகும்படி ஜெபித்தார். தேவஅன்பும் சகோதர அன்பும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. தேவஅன்பின்றி சகோதர அன்பில்லை; சகோதர அன்பின்றி தேவ அன்பில்லை.

சகோதர அன்புதேவ அன்புக்குப் பிரத்தியேகமானதல்ல. பிதாவிலிருந்து புறப்பட்டு குமாரனை நிரப்புகிற அன்பும், குமாரனிலிருந்து நமக்கு வருகிற அன்பும், நம்மிலிருந்து பிறருக்குப்போகிற அன்பும் ஒரே தேவ அன்புதான்.

பரலோக பூலோக பாஷைகளைப் பேசினாலும் அன்பற்றவர்களாயிருந்தால் நமது பேச்சு காதடைக்கும் வெண்கல இரைச்சலேயன்றி வேறில்லை. தீர்க்கதரிசனவரம், சகல இரகசியங்கள், சகல அறிவு, சகல விசுவாசம், எமக்கிருந்தாலும் அன்பற்றவர்களானால் நமக்கு ஒன்றுமே இல்லை. நமக்குள்ள எல்லாவற்றையும் அன்னதானம் பண்ணினாலும், சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பில்லை என்றால் ஒன்றுமில்லை. அன்பு ஒன்றுதான் குழந்தைகளும் எல்லோரும் அறியக்கூடிய பொதுப்பாஷை. அன்புக்கு நிகரானது ஒன்றுமில்லை. அன்புக்கு மேலானதும் ஒன்றுமில்லை.

அன்பன் ஆத்திரப்படாமல் நீடிய சாந்தமாயிருப்பான். கடினமாயிராமல் தயவுள்ளவனாயிருப்பான். பொறாமைப்படாமல் பரமரம்மியமாயிருப்பான். தன்னைப்புகழாமல் அடக்கமாயிருப்பான். இறுமாப்பாயிராமல் தாழ்மையாயிருப்பான். அயோக்கியமானதைச் செய்யாமல் மரியாதையாய் நடப்பான். தற்பொழிவை நாடாமல் பிறர் நலம்கருதுவான். சினமடையாமல் பொறுமையாயிருப்பான். தீங்கு நினையாமல் நன்மை செய்வான். அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படுவான். சகலத்தையும் தாங்குவான். சகலத்தையும் விசுவசிப்பான். சகலத்தையும் நம்புவான். சகலத்தையும் சகிப்பான்.

நாம் கத்தோலிக்க கிறீஸ்தவர்கள் என்பதற்கு அடையாளங்களெவை? ஞானஸ்நானமும், தேவநற்கருணையுமா? ஆலயங்களும் ஆராதனைகளுமா? ஜெபக்கூட்டங்களும் பாட்டுக் கோஷ்டிகளுமா? ஆம் இவை யாவும் நல்லகாரியங்கள்தான். ஆனால், இவைகளில் ஒன்றையாகிலும் கிறீஸ்தவர்களுக்கு அடையாளமென்று கிறீஸ்துஏசு சொல்லவில்லை. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினாலே நீங்கள் என்னுடைய சீடர்களென்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள்" என்றுதான் கூறினார்.

கிறீஸ்தவர்களின் தொகை பெருகலாம். ஆலயங்கள் எழும்பலாம். ஆராதனைகள் மும்முரமாய் நடக்கலாம். பீடத்திலிருந்து பிரசங்கங்கள் தொனிக்கலாம். இவை யாவும் இருந்தும் சகோதர அன்பில்லையென்றால் சகலமும் பாழாகும். வேதபாரகர், பரிசேயருடைய ஆராதனைகளும், பலிகளும், பண்டிகைகளும், அழிந்துபோயின. அவர்களிடத்தில் அன்போ, இரக்கமோ, தயவோ, தயாளமோ இல்லை. அவர்களை நம்பின யூதசனங்களின் ஆன்மநிலை மோசமாயிருப்பதைக் கண்டு கிறீஸ்துஏசு மனதுருகினார். அவர்களுக்காகக் கண்ணீர்விட்டழுதார்.

பக்திலொருபாகம் கொடுப்பதிலும் சகோதர அன்பே பிரதானம். பலிபீடத்தில் வைக்கும் காணிக்கையைவிட சகோதரனோடு ஒப்புரவாகுதலே பிரதானம். ஜெபத்தைவிட சகோதரன் குற்றத்தை மன்னிப்பது பிரதானம் என்று கிறீஸ்துவ போதிக்கிறார். இறைவனிடத்தில் ஒருவன் அன்பு கூருகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். கிறீஸ்து ஏசு தாம் வேறு நாம் வேறு என்று நினைக்கவில்லை. சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்பட்டார். அழுகிறவர்களுடனே அழுதார். ஒருவருடைய சந்தோஷத்தை நமது சந்தோஷமாகவும் ஒருவருடைய சஞ்சலத்தை நமது சஞ்சலமாகவும் உணருதலே அன்பின் இலட்சணமாகும்.

நமது வாழ்வோ இதற்கு எதிரிடையாகவிருக்கிறது. மற்றவர்களுடைய சந்தோஷம் நமக்குச் சஞ்சலம். அவர்களுடைய அழுகை நமக்கு ஆனந்தம். மற்றவர்களுடைய மேன்மை நமக்குப் பொறாமை. அவர்களுடைய அவமானம் நமக்கு மகிழ்ச்சி. இந்த இழிவான குணத்தினாலேதான் மற்றவர்கள் தங்கள் சந்தோஷத்தையோ, சஞ்சலத்தையோ வெளிவிடாமல் மறைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவுமாயிருக்கவேண்டிய கிறீஸ்தவர்கள் இப்படி ஒருவருக்கொருவர் பொறாமையாயிருந்தால் இப்படிப்பட்ட கிறீஸ்தற்ற கிறீஸ்துமார்க்கம் இல்லாமல் போவதேநல்லது.

கிறீஸ்துஏசு போதிக்கிற அன்பின் ஜீவியம் நமது சுபாவத்திற்கு எட்டாத உயரமாயிருக்கிறது. பிறப்பு முதல் தன்னயத்திலேயே வேரூன்றிவளர்ந்து அன்புக்கு அன்னியராய்ப் போய்விட்டோம். சிலர் நாங்கள் தேவனிடத்தில் அன்பாயிருக்கிறோம், மற்றவர்களிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்கிறார்கள். வேறுசிலர் நாங்கள் மனுஷரிடத்தில் அன்பாயிருக்கிறோம், சமுதாய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறோம், ஜனங்களைச் சீர்திருத்தப் பிரயாசப்படுகிறோம். ஆனால், தேவனிடத்தில் அன்பாயிருக்க முடியவில்லை என்கிறார்கள். இந்த இரு திறத்தார் சொல்வதும்பொய். கிறீஸ்து ஏசு தேவ அன்பு வேறு, சகோதர அன்பு வேறு என்று பிரிக்காமல் இரண்டையும் ஒன்றாய் இணைத்திருக்கிறார். தேவனிடம் அன்பாய் இருக்கிறது மெய்யானால் சகோதரனிடம் அன்பில்லாதிருக்க முடியாது. சகோதரனிடம் அன்பாயிருக்கிறது மெய்யானால் தேவனிடம் அன்பில்லாதிருக்க முடியாது.

மக்களுள் பலர் தேவ அன்புள்ளவர்களாய் வாழ சில செபங்களை நாடோறும் ஜெபித்துவந்தால் போதுமென்று எண்ணுகின்றனர். வேறு சிலர் தங்களுக்குப் பிரியமான நவநாட்களைத் திரும்பத் திரும்பச் செய்துவந்தால் போதுமென்றெண்ணுகின்றனர். இன்னும் சிலர் பல ஊர்களின் பாதுகாவலர்களான புனிதர்களின் திருநாட்களுக்குப் போய்வருதலே போதுமென நினைக்கின்றனர். மற்றும்சிலர் பக்திக் கூட்டங்களில் சேர்ந்திருந்தால் நாங்கள் தேவ அன்புள்ளவர்களென்று நினைக்கின்றனர். இன்னும் சிலர் புனிதர்களின் சுரூபங்களுக்கு அடிக்கடி மாலைகள் அணிவித்தல், மெழுகுவர்த்திகளை எரியவிடுதல் முதலியனசெய்தால் தேவஅன்பின் கடமைகளை நிறைவேற்றப் போதுமென்றும், தினமும் பூசைப்பலிக்குச் செல்லுதல், நன்மைவாங்குதல், அடிக்கடி ஒருசந்தி உபவாசமிருத்தல், தவமுயற்சிகள் செய்தல் இவைகளில்தான் தேவ அன்பு அமைந்திருப்பதாகவும் எண்ணிக் கொள்ளுகின்றனர். ஆனால், இவர்களில் பலர் அண்டை வீட்டாருடன் அன்புடன் பழகவும், சுயாதானமாய் வாழவும் மாட்டார்கள். அயலார்மீது தங்களுக்குள்ள மனத்தாங்கல் கோபக்குரோதங்களைத் தணித்துக் கொள்ளமாட்டார்கள். அவர்கள்மீது தங்களுக்குள்ள பகை, வைராக்கியம், பொறாமை, முதலிய தீக்குணங்களை விடமாட்டார்கள். ஏன் தங்கள் உடன்பிறந்தார் உறவினருடைய குற்றங்களை முதலாய் மனதார மன்னிக்கமாட்டார்கள். அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்குகொள்ள மறுத்துவிடுகிறார்கள். சிலர் தங்களது கண்முன்வாழும் ஏழைமக்களின் துயரங்களைக் கண்டு சற்றும் இரக்கங் கொள்ளமாட்டார்கள். சுருங்கக்கூறின் நாமெல்லோரும் இக்குற்றங்களுக்கு அடிமைப்பட்டவர்களாகவே வாழ்கின்றோம். பக்திநெறிக்குரிய கிறீஸ்து ஏசுவின் தெய்வீக போதனையாம் சகோதர அன்பை நாம் அறியாமல் ஜீவிப்பது கவலைக்குரியதே.

நமது அன்பில்லாமையை உணர்ந்து கிறீஸ்து ஏசுபாதத்தில் நம்மைத் தாழ்த்துவோமாக. அவரது மரணத்தில் வெளிப்பட்ட தேவஅன்பைத் தியானிப்போமாக. நமது அன்பை நமது இருதயங்களில் ஊற்றுமாறு ஏக்கமாக ஜெபிப்போமாக. அன்பின் இரட்சகர் நமக்குள்வசிக்கும்படி அவரை ஆராதித்து அவரிலேயே நிலைத்திருப்போமாக. அவர் நம்மை அன்பர்களாக்குவார். அன்பின் ஜீவியமே அழியாத ஆசீர்வா...

## மாஸ்றர் ஏ. ஈ. தம்பர் அவர்களின் மறைவு

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்துவந்தவராகிய தம்பு மாஸ்றர் அவர்களின் அகால மறைவானது பொதுவாக அவரை அறிந்தவர்களுக்கும் சிறப்பாக அவருடன் நெருங்கிப் பழகி அவருடைய ஆழம்கொண்ட விவேக ஆலோசனைகளை—கல்வி, கலை விஷயமாகவோ, சமூகசேவை சம்பந்தமாகவோ, அரசியல்ரீதியாகவோ அனுபவித்தவர்கள் யாவருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலே கல்விபயின்று, விஞ்ஞான முறையில் பட்டதாரியாகி, அக்கல்லூரியிலேயே திறமை மிக்க ஆசிரியராகச் சேவைசெய்து, ஈற்றில் அக்கல்லூரியின் அதிபராகி, யாவராலும் போற்றத்தக்க முறையில் கடமையாற்றி இளைப்பாறியிருந்தார்—அவர் தமது சீவியகாலத்தில் ஈடுபட்டுள்ள அரும்பெரும் பணிகள் பல. அவர் அங்கம்வகிக்காத சபைகளோ சங்கங்களோ இல்லையெனலாம். அவர் ஓர் உண்மையான இலட்சியவாதி. சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சமமாக்கும் நோக்கமாக 1920-ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வாலிப மகாநாட்டின் முன்னோடிகளுள் ஒருவராகவிளங்கி புரட்சிகரமான பணியாற்றியுள்ளார். அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை சோல்பரி ஆணையாளர் முன் சமர்ப்பித்த மகஜர் இவரது ஆலோசனையைத் தழுவியே சமர்ப்பிக்கப்பட்டது. முதலியார் ஏ. பி. இராசேந்திர செனெற் பதவி பெறுவதற்கு தம்பு மாஸ்றர் அவர்களே பிரதம காரணர் எனிற் பொய்யாகாது. இவர் ஓர் இலட்சியவாதி மட்டுமல்லச் சிறந்த தேசியவாதியும் கூட. இவர் ஆற்றிய அரும்பெரும் பணிகள் தேசியநலனைக் கருதியே செயலாற்றப்பட்டன. இவர் எவ்வித சந்தர்ப்பத்திலும் தேசிய உடையிலேயே தோற்றமளித்தார். கூட்டுறவுச் சமாசத்தலைவராகிச் சங்க வளர்ச்சிக்கு முரணாயிருந்த கொள்கைகளை அகலச்செய்தார். அகில இலங்கை ஆசிரியர் ஐக்கியசங்கத்தின் தலைவராக 5 வருடங்களாகத் தொடர்ந்திருந்து அளப்பரிய சேவை செய்தார். சங்கத்தில் இடையிடையே தலைகாட்டிய பிரச்சினைகள் யாவையும் வெகு சாதுரியமாகச் சமாளித்துவிடுவார். ஆசிரியர் சம்பளத் திட்டம், பென்சன் வசதிகள் உருவாக்கப்பட பெருமுயற்சிகள் எடுத்தார். இவர் ஓர் அரசியல்வாதியும் கூட. அரசியல் ஞானத்தில அவருக்கு ஒரு தனிப்பட்ட முதிர்ந்த அறிவு மிளிர்ந்திருந்தது. இலங்கையின் முதற் தேசாதிபதி திரு. டி. எஸ். சேனநாயக்க இவரது அரசியல் ஞானத்திற்கு நன்மதிப்பளித்து இவரைத் தம்மிடம் அழைத்து இவரது ஆலோசனைகளை ஆதரித்தார் என்பது நாடறிந்த விஷயம். இவரது சமூகசேவை சாதாரணமானதல்ல. ஆசிரியரல்லாத வட இலங்கைப் பாடசாலை ஊழியர்களின் பரிதாபநிலைக்குஇரங்கி, அவர்களுக்கு ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன் தலைவராயிருக்கவும் சம்மதித்து சங்கத்திற்குச் சிறப்புக்கொடுத்தார். பல தனிப்பட்டவர்களும் தங்கள் சங்கடங்களைத் தீர்த்துக் கொள்வதற்குப் பெரும் உதவியளித்துள்ளார். அவர் வியாதியாகிச் சிகிச்சை இல்லத்தில் படுத்திருக்கும்போதும் அவர் உதவியை நாடியவர்களுக்கு அன்புடனும், அனுதாபத்துடனும் உதவியளித்தார்

சாந்தமோ, தாழ்ச்சியோ, தண்ணளியோ, தானதர்மக் கொடையோ தம் இன்னல்கள் மத்தியிலும், தன்னயம் பேணாத கடையோ யாவும் ஒருங்கேயமைந்த மகாத்மா தம்பு மாஸ்றர் அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக.

— டி. ஜேம்ஸ்

எதிர்பாருங்கள்!

புதிய வெளியீடாக
விரைவில்
வெளிவரவிருக்கிறது

**இறைவனைப் புகழ்வோம்**

(திருப்பலிச் செபங்களும்
பாடல்களும்)

என்னும் புத்தகம்

பெற்றுக்கொள்ளும் முகவரி: —

அதிபர்,
சஞ்சுசை மாமுனிவர்
புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

## பூசை வழிகாட்டி

**மாசி 1971.**

1. திங்கள் நாள் பூசை [ஊ]
   வாசகம்: லேவி. 19: 1—2, 11—18
   சுவிசேஷம்: மத். 25: 31—46
2. செவ். நாள் பூசை [ஊ]
   வாசகம்: இசை. 55: 10—11
   சுவிசேஷம்: மத். 6: 7—15
3. புதன் நாள் பூசை [ஊ]
   வாசகம்: யோனுஸ் 3: 1—10
   சுவிசேஷம்: லூக். 11: 29—32
4. வியா. நாள் பூசை [ஊ]
   (அ) புனித கசிமீர்
   வாசகம்: எஸ்தேர் 14: 1, 3—5, 12—14
   சுவிசேஷம்: மத். 7: 7—12
5. வெள்ளி நாள் பூசை [ஊ]
   வாசகம்: எசேக். 18: 21—28
   சுவிசேஷம்: மத்தேயு 5: 20—26
6. சனி நாள் பூசை [ஊ]
   வாசகம்: உபா. 26: 16—19
   சுவிசேஷம்: மத். 5: 43—48
7. ஞாயிறு தவக்கால 2ஆம் ஞாயிறு (ஊ)
   1ஆம் வாசகம்: ஆதி. 15: 5—12, 17—18
   2ஆம் வாசகம்: பிலிப். 3: 17—4: 1
   சுவிசேஷம்: லூக்காஸ் 9: 28—36

*சத்தியவேத பாதுகாவலன்*

## தவக்காலத்தை வீணாக்காதீர்

தவக்காலத்தின் ஆரம்பத்தில் நிற்கும் நாம் தவத்தைப்பற்றிய சில சிந்தனைகளை மனத்திற் கொள்வது பொருத்தமாகும். அடுத்துவரும் சிலவாரங்கள் பூரண கிறிஸ்தவராக வாழவிரும்புவோரை அறைகூவியழைக்கும் காலமாகும். அதன் உட்பொருள் முழுவதையும் நாம் விளங்கிக் கொள்வதுடன் அதன்படி வாழவும் முயற்சித்தல் வேண்டும்.

தவக்காலம் என்ற வார்த்தையுடன் நம் கண்முன் தோன்றுவது ஒறுத்தல், உபவாசம், ஞானஒடுக்கங்கள், சிலுவைப்பாதை. இவை தவக்காலத்தில் பொதுவாகக் கையாளப்படும் சில கிருத்தியங்கள். இந்த அப்பியாசங்கள் எம் ஆன்மாவை உறுதிப்படுத்தி, பாவச் சோதனை ஏற்படுபபோது அதில் விழாதபடி துணை செய்கின்றன. ஆயினும் எந்த ஒறுத்தல் முயற்சியும் தன்னில்தானே பலனுடையதாகாது. கிறிஸ்துநாதருடைய அன்புக்காக மேற்கொள்ளப்படும் போது தான் அவை தவமாக மாறுகின்றன,

கிறிஸ்துநாதருடைய குரலொலியைக் கேட்டு எமது நாளாந்த சீவியத்தின அலுவல்கள், கடமைகளிலிருந்து மனதைச் சற்றுஉயர்த்தி அதை அவரிலேயே பதியச் செய்வதுதான் தவக்காலத்தின் முக்கிய அம்சமாக இருக்கவேண்டும். இதன் விளைவாகவே செபத்தையும், தவத்தையும் அதிகமாக மேற்கொள்ளுகிறோம். செபத்தின் வழியாகவும் திருவருட் சாதனங்களைப் பெறுவதன் மூலமும் அவருக்கு மிக அண்மையில் இருக்க முயல்வதுடன், எமது சிறு தவமுயற்சிகளைக் கிறிஸ்துவின் பாடுகளோடு ஒன்றுசேர்த்து ஒப்புக் கொடுப்பதால் அந்த அற்பச் செயல்களெல்லாம் தெய்வீகத் தன்மையை அடையவும் செய்கிறோம். இதனைச் சிந்தனையிற் கொள்ளாவிட்டால் வெளிச்செயல்களையே பிரதானமாகக்கொண்டு அவற்றின் உண்மையான கருத்தை மறந்துவிடுவதற்கு ஏதுவாகும்.

தேவனை இன்னும் அதிகமாக நேசிக்கவும், மனிதனை இன்னும் அதிகமாக நேசிக்கவும் தவக்காலம் எம்மை அழைக்கின்றது. இறைவனின் சித்தத்தோடு ஒன்றித்து, கிறிஸ்துவுக்கு இன்னும் கூடியவிதமாகச் சாட்சி பகரவும் அது எம்மை அழைக்கின்றது. கிறிஸ்துவின் அன்புக்காக நாம் செய்யும ஒவ்வொரு தவக்கிருத்தியமும் ஒரு காப்புறுதியாக நின்று எமது ஆன்மீக நலனைப் பாதுகாக்கின்றது,

ஆகவே, உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ விரும்புவோர் அனைவரும் அதற்காகப் பயிற்சிபெறுவதில் இத் தவக்காலத்தைப் பயன்படுத்தி, ஆன்மீக நலன்களைத் தேடுவதுடன் கிறிஸ்துநாதரின் அண்மையில் வாழவும் கற்றுக் கொள்வார்களாக.

# செய்திகள்

### இன்னும் ஒரு வருடகாலம்

இவ்வருடத்திலே 55வயதை அடைகின்ற அரசாங்க ஊழியர்களின் சேவையை அரசாங்கம் இன்னும் ஒரு வருடம் நீடிக்கும்படி செய்ய விருப்பதாகத் தெரியவருகிறது. 1971ஆம் ஆண்டு மாசிமாதம் 12ஆம் திகதிக்கும், மார்கழிமாதம் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்திலே 55 வயதை அடைபவர்களுக்கே இந்தச் சலுகை அருளப்படவிருக்கிறது. 55வயதில் ஓய்வுபெற வேண்டுமென்ற விதியைத் திரும்பவும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று அரசாங்க தொழிற்சங்கங்கள் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேலும் ஒரு வருடகாலம் சேவையை நீடிக்கச் செய்திருக்கிறது. இதற்குமுன் 1970ஆண்டு 55வயதை அடைந்தவர்களுக்கு அரசாங்கம் ஒரு வருடகால சேவை வழங்கியிருந்தது.

### புடவை வாங்குகிறதானல்

புடவைகள் வாங்கவரும்போது கூப்பன் புத்தகத்துடன் உப உணவுஅட்டையும் கொண்டுவந்தால்மட்டும் புடவைகள் வழங்குவதென கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் தீர்மானித்திருக்கிறது. இப்புதிய ஒழுங்கைப் பங்குனி மாதமுதல் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளதாம். கூப்பன்களுக்குப் புடவை வழங்கும்போது அது பற்றி உப உணவு அட்டையில் குறிக்கப்படுமாம்.

### இனிமேல் காலதாமதமில்லை

யாழ்ப்பாண உதவிமேயர் திரு. ஏ துரைராசசிங்கம் முறையிடுசெய்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணப அரசினர் பெரியஆஸ்பத்திரியிலே மரணமடைகிறவர்களின் பிரேதங்களை உறவினரிடம் ஒப்படைப்பதில் இனிமேல் காலதாமதம் ஏற்படாவண்ணம் ஒழுங்கு செய்யப் பட்டிருக்கிறது உடனே அவைகளை உறவினரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று ஆஸ்பத்திரிப் பொலிசாருக்கு யாழ்ப்பாண பொலிஸ் சுப்பிறின்ரன் திரு. ஆர். சுந்தாலிங்கம் உத்தாவிட்டிருக்கின்றார்.

### மிதிபலகைப் பிரயாணம்

பஸ்வண்டிகளிலே மிதிபலகைகளில் பிரயாணஞ்செய்வது பங்குனிமாதம் 1ஆம் தேதியிலிருந்து நிச்சயமாகவே தடைசெய்யப்படுமெனப் போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது. இவ்விதம் அறிவிக்கப்படக் காரணம், மிதிபலகைப் பிரயாணத்தடை நடைமுறைக்கு வரமாட்டாதெனப் பொது மக்களிடையே வதந்திஒன்று பரவியதே.

### தங்கவிற்பனை

தனியார் பொற்கொல்லர்களுக்கு தங்கம்விற்பதை இதுவரை மத்தியவங்கி நடத்திவந்தது. இப்போது இதனை மக்கள்வங்கி பொறுப்பேற்றுள்ளது. தங்கப்பவுண் விற்பனையை மத்தியவங்கி நடத்தும் விடயமாய்ச் சர்வதேச நாணயசபை ஆட்சேபித்ததைத் தொடர்ந்தே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெர்மிற் வைத்திருப்பவர்களுக்கு ஒரு ட்ரோய் அவுண்ஸ் தங்கம் 500ரூபா வீதம் இங்கு விற்கப்பட்டது. இப்பொழுது அதன் பெறுமதி அதிகரித்துள்ளது.

### அமைச்சரின் முறையீடு

விவசாயப் பாடசாலைகளில் படித்துப் பயிற்சிபெற்ற இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடப் பின்வாங்குகிறார்களென்றும், விவசாயத்தில் சென்று காணிகளை வழங்கினாலும் அவர்கள் ஏற்கமறுக்கிறார்களென்றும் விவசாய-காணி அமைச்சர் அரசாங்கத்துக்கு முறையீடு செய்திருக்கின்றார். உள்நாட்டில் மிளகாய்ச் செய்கையை விருத்தி செய்வதற்கெனப் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை விவசாயப் பாடசாலைகளில் படித்துப் பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு வழங்க முன்வந்தும் அவர்கள் அதை ஏற்கப் பின்வாங்கியுள்ளார்களென்றும் அமைச்சர் அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கின்றார்.

### பரீட்சை நடத்த ஆயத்தம்

சென்ற 1970ஆம் ஆண்டு மார்கழிமாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதரப் பத்திரச் சாதாரண பரீட்சையின்போது வெளியான ஒன்பது பாடங்களுக்கும் திரும்பவும் பரீட்சை நடத்துவதற்கான ஒழுங்குகளைப் பரீட்சைப்பகுதி செய்து முடித்திருக்கிறது. இப்பரீட்சை வருகிறபங்குனி மாதம் 14ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்களாக நடைபெறவிருக்கிறது.

### ஆசிரியர்களின் பதவி உயர்வு

அடுத்த பாடசாலைத்தவணை அடுத்த வைகாசிமாதம் ஆரம்பமாகும்போது 3,500 உதவி ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறவிருக்கிறார்கள். இவர்களில் ஒருபாலார் முதலாந்தரத் தலைமையாசிரியர்களாகவும் மறுபாலார் இரண்டாந்தர உதவிஆசிரியர்களாவும் நியமனஞ் செய்யப்படுவார்கள். முதலாந் தரத்தலைமையாசிரியர் பதவிக்கு 9,000 ஆசிரியர்களும், இரண்டாந்தர ஆசிரியர் பதவிக்கு12,000 ஆசிரியர்களும் மனுப்பண்ணியிருந்தார்கள்.

### திடீர்ப் பரிசோதனை

பாடசாலைகளின் நிர்வாகம், ஆசிரியர்களின் ஒழுக்கினம் ஆகியன மிகமோசமான நிலையை அடைந்திருப்பதாகப் பெற்றோர் பலரும் செய்த முறையீட்டைத் தொடர்ந்து திடீர்ப்பரிசோதனைக் குழுக்கள் முன்னறிவித்தலின்றியே சகல பாடசாலைகளுக்கும் சென்று பரிசோதனை நடத்தவிருக்கின்றன. ஏற்கனவே சில பாடசாலைகளில் நடைபெற்ற திடீர்ப் பரிசோதனைகளில் பலஊழல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

### தருமப்பணம் வீட்டுக்குவரும்

இந்தப்பங்குனி மாதமுதல் பிச்சைச்சம்பளமென அறியப்படுகின்ற தருமப்பணத்தை எவருமே கச்சேரிகளிலும், காரியாதிகாரிகளின் கந்தோர்களிலும் போய்ப் பெறவேண்டியதில்லை. ஏனெனில் அதனைப் பெற்றுவருகிறவர்களின் வீடுகளுக்கே அதை அனுப்பிவைக்கச் சமூகசேவை அமைச்சு ஒழுங்கு செய்திருக்கிறது.

### ஆஸ்பத்திரிப் பார்வையாளர்

யாழ்ப்பாண மாநகரசபையில் நான்காம் வட்டார உறுப்பினராய் இருந்து வருகின்ற திரு. எஸ். ஜே. அன்ரனி யாழ்ப்பாண அரசினர் பெரிய ஆஸ்பத்திரியின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராகச் சுகாதார அமைச்சரால் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார்.

### திருமணமான ஆசிரியைகள்

ஆசிரியர்களின் இடமாற்றம் அடுத்த வைகாசிமாதம் 1ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளபோதிலும் திருமணமான ஆசிரியைகள் தங்கள் கணவன்மார் கடமைபார்க்கும் இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல அனுமதிக்கப்படுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

### எண்ணெய் பெற்ரோல், விலை

மண்ணெண்ணெய், பெற்ரோல், டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் சுலன் ஒன்று 15 சதம்வரை அதிகரிக்கலாமெனத் தெரியவருகிறது. இதற்குக் காரணம், பாரசீகக்குடாவிலுள்ள எண்ணெய்வளநாடுகளுக்கும், மேற்குநாடுகளின் எண்ணெய்க் கம்பெனிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள வர்த்தக உடன்படிக்கைதானும். கூடுதலான 15 சதத்தையும் பாவனையாளரிடமிருந்து பெறுவதா அன்றேல் விலையில் மாற்றஞ் செய்யாது விடுவதா என்பதுபற்றி அரசாங்கம் விரைவிலே தீர்மானிக்குமென நம்பப்படுகிறது.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருல் விவதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மாசி மாதம்27-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: 'கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;